நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மன்னார்குடி.

**முன்னிலை:- திருமதி. ஆ. சீதாலெட்சுமி, எம்.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.2, மன்னார்குடி.

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் நாள் திங்கட்கிழமை

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் சித்திரை மாதம் -07 ம் நாள்.

**CNR No.TNTV07- 000106-2010**

**ஆண்டு பட்டியல் வழக்கு எண். 287/2010**

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்: 24.05.2010

வழக்கு விசாரணை முடிவுற்ற நாள்: 15.04.2026

அரசுக்காக

காவல் ஆய்வாளர்,

பரவாக்கோட்டை காவல் நிலையம்,

குற்ற எண்.23/2010,

சட்டப்பிரிவுகள். 12 (1) of Passport Act r/w 420, 468, 471 IPC .

...குற்றமுறையீட்டாளர்.

/எதிர்/

| | |
|---|---|
| 1) ராஜதுரை, வயது. 23/2010,<br>த/பெ. துரைமாணிக்கம்,<br>தெற்கு தெரு, பரவாக்கோட்டை. | ..........1ம் எதிரி |
| 2) இந்திரஜித், வயது. 38/2010,<br>த/பெ. ராவணன்,<br>கீழத்தெரு, கூப்பாச்சிக்கோட்டை | ...........2 ம் எதிரி மீதான வழக்கானது<br>சி.சி.ண். 300/2025 ஆக பிரிக்கப்பட்டுள்ளது. |

| Sl. No. | Description | Remarks |
|---|---|---|
| 1. | The period of Remand of the Accused | A1-16.02.20210 |
| 2. | The Date of filing of Complaint / Final Report in the Court | 24.05.2010 |
| 3. | The Date of Questioning of Accused under sections 240, 246 and 251 Cr.P.C., | 05.06.2010 |
| 4. | Miscellaneous petition and thier results | N.A. |

<table>
<tr><td></td><td>including the results on challenge before superior court. Except routine petitioners like petition under sec 317 of the code.</td><td></td></tr>
<tr><td>5.</td><td>Date of Examination in chief and cross</td><td><table><tr><td>PW</td><td>Chief</td><td>Cross</td></tr><tr><td>1</td><td>05.07.2017</td><td>05.07.2017</td></tr><tr><td>2</td><td>05.03.2022</td><td>05.03.2022<br>13.03.2026</td></tr><tr><td>3</td><td>05.03.2022</td><td>05.03.2022</td></tr><tr><td>4</td><td>05.03.2022</td><td>05.03.2022<br>13.03.2022</td></tr><tr><td>5</td><td>15.04.2022</td><td>15.04.2022</td></tr></table></td></tr>
<tr><td>6.</td><td>Date of Examination of the Accused under section 313 Cr.P.C.,</td><td>15.04.2026</td></tr>
<tr><td>7.</td><td>Details of Abscondence of an accused and his appearance/ production, as the case may be</td><td>N.A.</td></tr>
<tr><td>8.</td><td>Grant of stay by Superior Courts</td><td>N.A.</td></tr>
</table>

இவ்வழக்கு என் முன்பாக 15.04.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. துரைவீரையன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று (18.04.2026) இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**/தீர்ப்புரை/**

இவ்வழக்கானது காவல் உதவி ஆய்வாளர், பரவாக்கோட்டை காவல் நிலைய குற்ற எண். 23/2010 -ன் கீழ் 1ம் எதிரி மீது பிரிவுகள் 12 (1) of Passport Act r/w 420, 468, 471 IPC ன் கீழான குற்றம் 1ம் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்**

கடந்த 2008 ம் ஆண்டு 1ம் எதிரி சிங்கப்பூர் போவதற்கு பாஸ்போர்ட் எடுப்பதற்குபொய்யான கல்விச்சான்று தயாரித்து சிங்கப்பூர் சென்றுள்ளதாகவும், எதிரிகள் இருவரும் சேர்ந்து ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான ஆவணங்களை தயாரித்து பொய்யான ஆவணங்கள்

என்று தெரிந்தும் உண்மையாக பயன்படுத்தி குற்றம் புரிந்துள்ளதாக 1 மற்றும் 2 எதிரிகள் மீது பிரிவுகள் 12 (1) of Passport Act r/w 420, 468, 471 IPC ன் கீழ் தண்டித்தக்கவர்கள் என்று பரவாக்கோட்டை காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **2ம் எதிரி மீதான வழக்கானது சி.சி.ண்.300/2025 ஆக பிரிக்கப்பட்டுள்ளது.**

2. குற்றப்பத்திரிக்கையை பரிசீலனை செய்து கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்கு எண் வழங்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207-ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

4. இவ்வழக்கின் இறுதி அறிக்கையையும், அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து வாதி தரப்பும், எதிரி தரப்பும் கேட்கப்பட்டு எதிரி குற்றம் செய்திருக்கிறார் என்று அனுமானிப்பதற்கு போதிய ஆதாரம் இருக்கிறது என்பதால் 1ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 12 (1) of Passport Act r/w 420, 468, 471 IPC-வின் கீழான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு அக்குற்றச்சாட்டுகளை 1ம் எதிரிக்கு படித்துக் காட்டி விளக்கப்பட்ட போது எதிரி தன் மீது சாட்டப்பட்ட குற்றத்தை தான் செய்யவில்லை என்று மறுத்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கோரினார். எனவே, தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. எதிரி கோரியவாறு வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. எதிரி மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலான சாட்சிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும், வழக்கை விசாரித்த பட்டியல் சாட்சிகள் 1 மற்றும் 2, ஒப்புதல் வாக்குமூல பட்டியல் சாட்சி 6 மற்றும் 7, புலன் விசாரணை அதிகாரியான பட்டியல் சாட்சி 8 காவல் ஆய்வாளர் திரு. அசோக்குமார் ஆகியோர் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். பட்டியல் சாட்சிகள் 3 முதல் 5 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளனர்.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. <u>விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு</u> -**

i) கடந்த 10.12.2009-ம் தேதியன்று D1/466/DCRB/09 என்ற நடப்பு தாளை திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவிலிருந்து பரவாக்கோட்டை காவல் நிலையத்திற்கு பார்வையிட்டு விசாரித்து அறிக்கை அனுப்புமாறு பரவாக்கோட்டை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். மேற்படி நடப்பு தாளை அ.சா.5 பார்வையிட்ட போது, ராஜதுரை என்பவர் பாஸ்போர்ட் எடுக்கும்போது கொடுத்த ஆவணங்களை சரிபார்த்து அறிக்கை அனுப்புமாறு அதில் குறிப்பிட்டிருந்ததாகவும், மேற்படி நடப்பு தாளின் அடிப்படையில் அ.சா.1 தலைமை காவலர் அழகேந்திரன் என்பவரை திருச்சி பாஸ்போர்ட் அலுவலகம் அனுப்பி மேற்படி எதிரியின் பாஸ்போர்ட் சம்மந்தமான அனைத்து ஆவணங்களை பெற்று வந்துள்ளார். மேலும் கடந்த 15.02.2010-ம் தேதியன்று அ.சா.2 முதல் நிலை காவலர் சிவஞானம் என்பவர் எதிரி ராஜதுரை பாஸ்போர்ட் எடுக்கும்போது பயன்படுத்திய பள்ளி சான்றிதழை சரிபார்ப்பதற்காக ஆலங்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு சென்று எதிரி ராஜதுரை பள்ளிசான்றிதழ் பற்றி தலைமை ஆசிரியரிடம் விசாரித்தபோது, தலைமை ஆசிரியர் மேற்படி நபர் இங்கு படிக்கவில்லை என்றும், பள்ளி மாற்று சான்றிதழ் இங்கு வழங்கவில்லை என்று தலைமை ஆசிரியர் சுப்ரமணியன் என்பவர் அ.சா.ஆ-1 உண்மைத்தன்மை சான்று வழங்கியுள்ளார்.

**ii)** பின்னர் மேற்படி உண்மை சான்றின் அடிப்படையில் கடந்த 16.02.2010-ம் தேதியன்று எதிரிகள் மீது பரவாக்கோட்டை நிலைய குற்ற எண்.23/2010, ச/பி. 12(1) (b) பாஸ்போர்ட் ஆக்ட் உ/இ 420,468,471 இ.த.ச-வின் கீழ் அ.சா.ஆ-2 முதல் தகவல் அறிக்கையின் படி அ.சா.5 வழக்கு பதிவு செய்துள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும், அன்றையதினமே எதிரிகள் இருவருக்கும் அழைப்பாணை அனுப்பி அதனடிப்படையில் நிலையம் வந்த எதிரிகளை விசாரித்தபோது, குற்றத்தை ஒப்புக்கொண்ட நபர்களை குற்றக்காரணம் கூறி கைது செய்துள்ளார்.

iii) பின்னர் எதிரி ராஜதுரை என்பவர் தானாக முன்வந்து கொடுத்த அ.சா.ஆ.3 ஒப்புதல் வாக்குமூலத்தை பட்டியல் சாட்சி 4 இளையராஜா மற்றும் பட்டியல் சாட்சி 5 செந்தில் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து, அதில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். அதே போல் எதிரி இந்திரஜித் என்பவரும் தானாக முன்வந்து கொடுத்த அ.சா.ஆ.4 ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அ.சா.3 ராஜா மற்றும் அ.சா.4 ராஜேந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துக்கொண்டு அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார்.

iv) எதிரி இந்திரஜித்தினுடைய ஒப்புதல் வாக்குமூலத்திலும், எதிரி ராஜதுரை கூறிய அதே சங்கதிகளை ஒத்துரைத்து கூறியதை அ.சா.5 பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரி ராஜதுரையிடமிருந்து பரவாக்கோட்டை அரசினர் மேல் நிலைப்பள்ளியில் மாற்று சான்றிதழ் கிழிந்த நிலையில் இருந்ததை சாட்சிகள் இளையராஜா மற்றும் செந்தில்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ-5 கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார். மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்த வகையில் எதிரி ராஜதுரை என்பவர் பரவாக்கோட்டை மேல்நிலைப்பள்ளியில் படித்தார் என்றும், ஆலங்கோட்டை அரசு மேல் நிலைப்பள்ளியில் அவர் படிக்கவில்லை என்று அ.சா.5 ன் விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும், 2 எதிரிகளும் கூட்டாக சேர்ந்து போலியான பள்ளிமாற்று சான்றிதழை தயார் செய்து பாஸ்போர்ட் பெற்றுள்ளார் என்ற விவரத்தினை அவரது விசாரணையில் தெரிந்துக்கொண்டதாகவும், பின்னர் எதிரிகள் இருவரையும் மற்றும் கைப்பற்றப்பட்ட தடயப்பொருட்கைள சமூகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து எதிரிகளை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும், கைப்பற்றப்பட்ட தடயப்பொருட்களை அ.சா.ஆ-6 படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, அது நீதிமன்ற வழக்கு சொத்து 24/2010- ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. இத்துடன் அவரது புலன்விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது 12(1)(b) பாஸ்போர்ட் ஆக்ட் உ/இ 420,468,471 இ.த.ச. வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகக் கூறி சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

8. மேற்கூறிய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 1ம் எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சிய பகுதிகளை கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) ன் கீழ் விளக்கி கூறி கேள்வி கேட்க 1ம்எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். எனவே, 1ம் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு கேட்கப்பட்டது.

**9. <u>அரசு தரப்பு வாதம் பின்வருமாறு</u> :-**

அரசு தரப்பில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிருத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் 1ம் எதிரி மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், 1ம் எதிரி தான் குற்ற செயலில் ஈடுபட்டு 2ம் எதிரியின் மூலம் கல்விச் சான்றிதழை போலியாக தயாரித்து, அந்த ஆவணங்களை உண்மையென பயன்படுத்தி, பாஸ்பார்ட் எடுத்து வெளிநாட்டிற்கு சென்று என்று குற்றம் புரிந்துள்ளார் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அமைந்துள்ளதாகக் கூறி எனவே 1ம் எதிரிக்கு தண்டனை வழங்குமாறும் எடுத்துரைத்தார்.

10. **<u>எதிரி தரப்பு வாதம் பின்வருமாறு</u>** :-

1ம் எதிரி வாதத்தின் போது இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிருத்தப்பட்ட ஆவணங்களும் சாட்சிகளின் சாட்சியங்களும் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், 1ம் எதிரி போலியாக தயாரித்தாக சொல்லப்படும் ஆலங்கோட்டை அரசு பள்ளியில் கொடுத்த பள்ளிசான்றிதழ் ஒப்படைக்கவில்லை என்றும் எதிரி மீது புகார் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் 1ம் எதிரி மீதுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி நிரூபிக்கப்படவில்லை என்று கூறி சந்தேகத்தின் பலனை 1ம் எதிரிக்கு வழங்கி விடுதலை செய்யவேண்டும் என்று 1ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார் .

11. **<u>இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>**:-

1ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 12 (1) of Passport Act r/w 420, 468, 471 IPC -ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

12. **<u>தீர்வு</u>** :-

திருச்சி பாஸ்போர்ட் அலுவலகம் சென்று 1ம் எதிரியின் பாஸ்போர்ட் தொடர்பான ஆவணங்களை பெற்று காவல் நிலையத்தில் ஒப்படைத்த நபரான தலைமை காவலர் அ.சா.1, ஆலங்கோட்டை மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியரை விசாரித்த நபரான முதல் நிலை காவலர் அ.சா.2, இவ்வழக்கின் 2ம் எதிரி இந்திரஜித் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்த நபர்களான அ.சா.3 மற்றும் அ.சா.4, வழக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் அ.சா.5 ஆகியோர்களின் சாட்சியம் மற்றும் சான்றவனங்களின் வாயிலாக 1ம் எதிரி தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்ய வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும்.

13) இவ்வழக்கின் 1ம் எதிரி சிங்கப்பூர் போவதற்காக 2ம் எதிரி மூலமாக பொய்யான கல்வி சான்றிதழ் தயாரித்து அவற்றின் மூலம் பாஸ்போர்ட் எடுத்து சிங்கப்பூர் சென்றதாகவும் ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான ஆவணங்களை தயாரித்து அவற்றை உண்மை என்று கூறி பயன்படுத்தியதாக எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

14) **திருச்சி பாஸ்போர்ட் அலுவலகம் சென்று 1ம் எதிரியின் பாஸ்போர்ட் தொடர்பான ஆவணங்களை பெற்று காவல் நிலையத்தில் ஒப்படைத்த நபரான தலைமை காவலர் அ.சா.1 தனது சாட்சியத்தில்** " கடந்த 10.12.2009 ஆம் தேதி ஆய்வாளர் அசோக்குமார் உத்தரவின் படி திருச்சி பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு சென்று வழக்கின் எதிரிகள் ராஜதுரை இந்திரஜித் ஆகியோரின் பாஸ்போர்ட் எடுப்பதற்கு தாக்கல் செய்த ஆவணங்களை பார்த்து நகல்களை பெற்றுக்கொண்டு வந்து ஆய்வாளரிடம் கொடுத்தேன் " என்று கூறி சாட்சியமளித்துள்ளார்

**அவர் தனது குறுக்கு விசாரணையில்** " திருச்சி பாஸ்போர்ட் அலுவலகத்தில் இருந்து ஒட்டப்பட்ட கவர் மூலம் என்னிடம் கொடுத்தார்கள் அப்படியேதான் ஆய்வாளரிடம் கொடுத்தேன். அதில் என்ன என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது" என்று கூறியுள்ளார் .

15) **ஆலங்கோட்டை மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியரை விசாரித்த நபரான முதல் நிலை காவலர் அ.சா.2 தனது சாட்சியத்தில்** " கடந்த 15. 02.2010 ம் தேதியன்று பரவாக்கோட்டை காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றியபோது, D1/466/DCRB/09 என்ற நம்பருள்ள கரண்ட் பேப்பர் சம்மந்தமாக உள்ள ராஜதுரை த/பெ துரைமாணிக்கம் தெற்கு, பரவாக்கோட்டை என்பவர் ஆலங்கோட்டை மேல்நிலைபள்ளியில் படித்ததாக சான்று பெற்று சிங்கப்பூர் சென்று வேலை பார்த்து திரும்பியுள்ளான். அவன் மேற்படி ஆலங்கோட்டை மேல்நிலைப்பள்ளியில் படித்தானா என்று அந்த பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களை சந்தித்து மேற்படி சான்று பற்றி கேட்டேன் பரவாக்கோட்டை ராஜதுரை என்பவர் தங்கள் பள்ளியில் படிக்கவில்லை என்று கூறினார். மேற்படி சான்று தங்களால் வழங்கப்படவில்லை என்றும் கூறினார் " என்று கூறி சாட்சியமளித்துள்ளார்.

**அவர் தனது குறுக்கு விசாரணையில்** "கடந்த 15.02.2010 ம் தேதியன்று நான் காவல் நிலையத்திலிருந்தேன் என்பதற்குரிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. D1/466/DCRB/09 என்ற கரண்ட் பேப்பரில் என்ன விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை தெரிந்துக்கொள்ளும் வகையில் அந்த ஆவணத்தின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் பணிபுரியக்கூடிய ஒரு நபருக்கு பணி ஒதுக்கிடும் செய்யும்போது அதற்குரிய பணிபதிவேட்டினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆஜர் 1ம் எதிரி எந்த தேதியில் சிங்கப்பூர் போனார் எப்போது இங்கு வந்தார். என்பது குறித்த ஆவணத்தின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிரி

ஆலங்கோட்டை அரசு பள்ளியில் படித்ததாக சான்று பெற்றுள்ளார் என்பதற்குண்டான ஆவணத்தின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிரியானவர் எந்த கல்வி ஆண்டில் படித்தார் போன்ற விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எந்த நேரத்தில் பள்ளியில் எந்த தலைமை ஆசிரியர் பணியில் இருந்தார் என்றும், அவரை எப்போது நான் சந்தித்து பேசினேன் என்பது குறித்தும், அவரை எந்த மணிக்கு நான் விசாரித்து என்பதற்குரிய ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் தங்களது பள்ளியில் படிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதற்குரிய ஆவணம் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த தலைமை ஆசிரியரிடம் எந்த சான்றுகளை காண்பித்து ராஜதுரை அந்த பள்ளியில் படித்தாரா இல்லையா என்பது குறித்து விசாரித்தது தொடர்பாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அந்த சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. " என்று கூறியுள்ளார்

16) **2 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்த அ.சா.3 மற்றும் அ.சா.4 தங்களது சாட்சியத்தில்** "கடந்த 16.02.2010 ம் தேதியன்று பரவாக்கோட்டை காவல்நிலைய குற்ற எனர் 23/ 2010 ல் காவல் ஆய்வாளர்கள் அவர்கள், கூப்பாச்சிக்கோட்டையை சேர்ந்த ராகவன் மகன் இந்திரஜித்தை என் முன்னிலையிலும், மகாதேவன்பேட்டையை சேர்ந்த சீனி மகன் ராஜேந்திரன் முன்னிலையிலும் விசாரித்தார்கள். அவர் காவல் ஆய்வாளரிடம் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று கொடுத்தார். அவர் வெளிநாடு செல்பவர்களுக்கு பணம் வாங்கிக்கொண்டு பாஸ்போர்ட் வாங்கி தருவதாக சொன்னார். பரவாக்கோட்டையை சேர்ந்த துரைமாணிக்கம் மகன் ராஜதுரை என்பவரும் தன்னிடம் பாஸ்போர்ட் எடுத்து தரச்சொல்லி பணம் கொடுத்ததாகவும் தன்னிடம் கல்விச்சான்றிதழ் இல்லை என்றும் கூறினார் என்று சொன்னார். அவர் அவரிடம் பணத்தை பெற்றுக்கொண்டேன். நான் மேற்படி நபருக்கு ரிக்கார்ட் ஷீட் மற்றும் பாஸ்போர்ட் தயார் செய்வதற்கு திருச்சி பஸ் நிலையத்தில் ஒரு நபரிடம் பணம் கொடுப்பேன். அவரும் தயார் செய்து கொடுப்பார் என்று கூறினார். அதுபோன்றே மேற்படி ராஜதுரை என்பவருக்கு போலி சான்றிதழ் தயாரிக்க கேட்டதாகவும், அவரும் ஆலங்கோட்டை மேல்நிலை பள்ளியில் படித்ததாக ரிக்கார்ட் ஷீட் தயாரித்து கொடுத்ததாகவும் கூறினார். அந்த சான்றிதழை பயன்படுத்தி ராஜதுரை சிங்கப்பூர் சென்று விசா முடிந்தும் அங்கிருந்ததால், அங்குள்ள போலிசாரிடம் பிடிப்பட்டு ஜெயிலில் இருந்தார் என்றும் தண்டனை காலம் முடிந்து சென்னை வந்தார் என்று கூறினார். இதற்கிடையில் போலிச்சான்றிதழ் தயார் செய்த விவரம் தெரிந்து பரவாக்கோட்டை காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார் என்று கூறினார். அவர் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டார்கள். எழுதிக்கொண்ட பேப்பரில் கையொப்பம் செய்தோம்" என்று கூறி சாட்சியமளித்துள்ளனர்.

**அ.சா.4 தனது குறுக்கு விசாரணையில்**" என்னிடம் கையொப்பம் பெற்ற ஆவணங்களிலுள்ள கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து செய்துக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் அரசியல் பிரமுகர் என்றால் சரிதான். நான் நல்ல செயல்களுக்காகவும், சில நபர்களின் உதவி செய்யும் பொருட்டு நான் காவல் நிலையம் செல்வேன் என்றால் சரிதான். அந்த வகையில் நான் காவல் நிலையம் சென்றபோது என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். எனது ஊர் மகாதேவப்பட்டினம், பரவாக்கோட்டை கூப்பாச்சிக்கோட்டை ஆகிய கிராமங்கள் அருகருகே உள்ள கிராமங்கள் என்பதால் அங்குள்ள நபர்கள் ஓரளவு பரிச்சமானவர்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்காக காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் நான் கையொப்பம் செய்து நீண்ட நாட்களாகிவிட்டது அதனால் சரியாக ஞாபகமில்லை " என்று கூறியுள்ளார்.

17) திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவிலிருந்து கடந்த 10.12.2009 ஆம் தேதி அன்று D1/466/DCRB/09 நடப்பு தாளை விசாரித்து அறிக்கை அனுப்புமாறு பரவாக்கோட்டை காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் அவற்றை அ. சா. 5 காவல் ஆய்வாளர் பார்வையிட்டபோது 1ம் எதிரி ராஜதுரை பாஸ்போர்ட் எடுக்கும் போது கொடுத்த ஆவணங்களை சரி பார்த்து அறிக்கை அனுப்புமாறு அதில் சொல்லப்பட்டிருந்ததால் அ.சா.1 யை திருச்சி பாஸ்போர்ட் அலுவலகம் அனுப்பி 1ம் எதிரி ராஜதுரை என்பவரின் பாஸ்போர்ட் தொடர்புடைய ஆவணங்கள் பெற்றும், 15.2.2010 அன்று அ.சா.2 ஆலங்கோட்டை தலைமை ஆசிரியரை விசாரித்த போது 1ம் எதிரி அங்கு படிக்கவில்லை என்று கூறி வழங்கிய சான்றைப் பெற்றும் அதன் அடிப்படையில் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ததாக அ.சா.5 சாட்சியம் அளித்துள்ள நிலையில் பரவாக்கோட்டை காவல் நிலையத்திற்கு மாவட்ட குற்ற பிரிவிலிருந்து அனுப்பப்பட்ட D1/466/DCRB/09 நடப்பு தாள் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

18) மாவட்ட குற்றப்பிரிவிலிருந்து எதன் அடிப்படையில் D1/466/DCRB/09 நடப்பு தாள் அனுப்பப்பட்டது என்பது குறித்து அ.சா.5 யை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது " மாவட்ட குற்றப்பிரிவிற்கு யாரால் புகார் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் - பாஸ்போர்ட் அலுவலகத்திலிருந்து குற்றப்பிரிவிற்கு புகார் அனுப்பட்டது என்று தெரியும், ஆனால் யாரால் புகார் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு எனக்கு தெரியாது" என்று கூறியுள்ளார். 1ம் எதிரி போலியான பள்ளிச்சான்றிதழை கொடுத்து பாஸ்போர்ட் எடுத்தது தொடர்பாக திருச்சி பாஸ்போர்ட் அலுவலகத்திலிருந்து புகார் அனுப்பியதன் அடிப்படையில் தான் மாவட்ட குற்ற பிரிவிலிருந்து பரவாக்கோட்டை காவல் நிலையத்திற்கு நடப்பு தாள் அனுப்பப்பட்டதாகவும்,

அதனடிப்படையில் தான் அ.சா.5 விசாரணை செய்து வழக்கை பதிவு செய்ததாக சொல்லியிருந்தாலும் கூட அவற்றை நிரூபணம் செய்யும் விதமாக பாஸ்போர்ட் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட புகார் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை.

19) மேலும் 2ம் எதிரி இந்திரஜித் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும் போது ராஜதுரை ஆலங்கோட்டை பள்ளியில் படித்ததாக சொல்லி ரெகார்ட் சீட் தயார் செய்து கொடுத்ததாக சொன்னார் என்று கூறி அ.சா.3 மற்றும் அ.சா.4 சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.2 ஆலங்கோட்டை தலைமை ஆசிரியரை விசாரணை செய்த போது 1ம் எதிரி அந்த பள்ளியில் படிக்கவில்லை என்று அந்த பள்ளிசான்று அவரால் வழங்கப்படவில்லை என்று கூறி சான்று வழங்கியதாக அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.ஆனால் ஆலங்கோட்டை பள்ளியின் தலைமை ஆசிரியர் சுப்ரமணியன் என்பவரை இவ்வழக்கில் சாட்சியாக முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் அவரிடம் காண்பித்து விசாரித்ததாக சொல்லப்படும் ஆலங்கோட்டை பள்ளியில் வழங்கப்பட்ட பள்ளிசான்றிதழை அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை.

20) ஆனால் எதிரி ராஜதுரை பெயரில் உள்ள பரவாக்கோட்டை அரசு மேல்நிலை பள்ளியில் வழங்கப்பட்ட மாற்றுச் சான்றிதழ் கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றப்பட்டு படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு அரசுதரப்பில் **அ.சா.ஆ 7 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட போலியாக தயார் செய்யப்பட்ட ஆலங்கோட்டை பள்ளிசான்றிதழ் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படாமல் பரவாக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் வழங்கிய மாற்றுச்சான்றிதழ் முன்னிலைப்பட்டுத்தப்பட்டுள்ளது.

21) 1ம் எதிரி ராஜதுரை திருச்சி பாஸ்போர்ட் அலுவலகத்தில் பாஸ்போர்ட் எடுப்பதற்காக போலியான ஆவணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டதாக அரசு தரப்பில் சொல்லியுள்ள நிலையில் அந்த பாஸ்போர்ட் அலுவலகத்திலுள்ள ஒரு நபரைக் கூட இவ்வழக்கில் சாட்சியாக முன்னிலைப்படுத்தவில்லை. அரசு தரப்பில் 1ம் எதிரி எந்தெந்த ஆவணங்களைக் கொடுத்து பாஸ்போர்ட் எடுக்க முயற்சி செய்தார் என்பது குறித்தும் மாவட்ட குற்றப்பிரிவிற்கு யாரிடமிருந்த புகார் பெறப்பட்டது என்பது குறித்தும் எதனடிப்படையில் இந்த வழக்கு 1ம் எதிரி மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்தும் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படாத நிலையில் 1ம் எதிரி தான் மேற்கண்ட ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான ஆவணங்கள் என்று தெரிந்தும் உண்மை

என்று கூறி பயன்படுத்தி ஏமாற்றியுள்ளார் என்று தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

மேற்கண்ட காரணங்களினால் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 12 (1) of Passport Act r/w 420, 468, 471 IPC- ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>இறுதியாக</u>**

1) இவ்வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன்களை 1ம் எதிரிக்கு வழங்கி 1ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 12 (1) of Passport Act r/w 420, 468, 471 IPC - ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து மேற்படி 1ம் எதிரியை இவ்வழக்கில் இருந்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

2) 1ம் எதிரி கொடுத்த பிணை முறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

3)இந்த வழக்கில் கைப்பற்றபட்ட வழக்கு சொத்தான சி.பி. எண். 24/2010 ல் உள்ள கிழிந்த நிலையில் உள்ள இராஜதுரை, த/பெ. துரைமாணிக்கம் என்பவரது பள்ளி மாற்றுச் சான்றிதழ் பரவாக்கோட்டை அரசினர் மேனிலைப் பள்ளியில் வழங்கப்பட்டது குறித்தும் அந்த ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்று அரசு தரப்பில் சொல்லப்படாத நிலையில் 1ம் எதிரி மேல் முறையீட்டு காலத்திற்கு பின் மனு செய்து இந்நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ளும்படி உத்தரவிடப்படுகிறது.

4) வழக்கின் தன்மை, சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்திற் கொண்டு கு.வி.மு.ச. 1973 பிரிவு 357, 357(A) ன்கீழ் உத்தரவுகள் எதுவும் இல்லை.

| Particulars Under Rule 106 of Criminal Rules of Practice-2019 | |
|---|---|
| Description of the accused | Date of |

| Sl.No. | Name of the Police Station and Cr. No. | Name | Father Name | Occupation | Residency | Age | Occurance | Complaint | Apprehension | Commitment | Commencement of trial | Close of trial | Sentence of Order | Service Copy of Judgment an accused | Explanation of Delay |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | Paravakottai 3/2010 | Rajadurai | Duraimanikka, | Coolie | Therku Theru, paravakottai | 23/2010 | 16.02.2010 | 16.02.2010 | 16.02.2010 | Not Applicable | 05.07.2011 | 09.04.2026 | Accquitted | 20.04.2026 | No Delay |

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- ஆ.சீதாலெட்சுமி,
நீதித்துறை நடுவர்எண்.2,
மன்னார்குடி.

**1. அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு. அழகேந்திரன் | பாஸ்போர்ட் ஆவணங்களை பெற்று காவல் நிலையத்தில் ஒப்படைத்த தலைமை காவலர் |
| அ.சா.2 | திரு. சிவஞானம் | ஆலங்கோட்டை மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியரை விசாரித்த முதல் நிலை காவலர் |
| அ.சா.3 | ராஜா | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.4 | ராஜேந்திரன் | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.5 | அசோக்குமார் | காவல் ஆய்வாளர், புலன் விசாரணை அதிகாரி |

**2. அரசு தரப்பு சான்றவாணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 15.02.2010 | தலைமை ஆசிரியர் வழங்கிய உண்மைத் தன்மை சான்று |
| அ.சா.ஆ.2 | 16.02.2010 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 16.02.2010 | 1ம் எதிரி ராஜதுரை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் |
| அ.சா.ஆ.4 | 16.02.2010 | 2ம் எதிரி இந்திரஜித் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் |

| | | |
|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் |
| அ.சா.ஆ. 5 | 16.02.2010 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.6 | 16.02.2010 | படிவம் 91 |
| அ.சா.ஆ.7 | 16.02.2010 | 1ம் எதிரி பெயரில் உள்ள பள்ளி மாற்று சான்று அசல் |

3. எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை.

4. அரசு தரப்பு சான்று பொருள்: இல்லை.

ஒம்/- ஆ.சீதாலெட்சுமி,

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

// உண்மை நகல் //

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

<u>குறிப்பு.</u>

1 இவ்வழக்கின் தீர்ப்பு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2 இவ்வழக்கின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்.

3 இவ்வழக்கு விசாரணையின் போது சாட்சிகள் மூன்று வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.

4 கு.வி.மு.ச. 363(5) ஆவது பிரிவின்படி மனனார்குடி அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.

**நகல்** :-

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.